Registered as a News Paper   பக்கங்கள் 04   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 08   திருவள்ளுவர் ஆண்டு 2023   மார்கழி 18   (02-01-1993)   சனிக்கிழமை   ஓசை 319

## தனியார் பார்மஸியில் தவறானமருந்து விற்பனை

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பார்மஸி ஒரு மருந்துக்குப் பதிலாக மற்றொரு மருந்தை விற்றதாக தெரிவிக்கப்படுகிறது. சரும நோய்க்காக வைத்தியரினால் எழுதிக் கொடுக்கப்பட்ட சப்லோசன் (Gap Lotion) மருந்துக்குப் பதிலாக அன்ரிக் கப்ஸ் (Anti-Caps) என்ற மருந்தை அந்தப் பார்மஸி அவுன்ஸ் ஒன்று 25 ரூபா விலைக்கு விற்றுள்ளது. அன்ரிக் கப்ஸ் பூச்சி மருந்தை பென்சைல் பென்சோபேற் (Benzyl Benzovate) என்று சொல்லி விற்றதாகவும் தெரியவருகிறது. இதேவேளை, அன்ரிக்கப்ஸ் சில களைவைகளைக் கொண்டு உள்ளூரில் தயாரிக்கப்படும் தோல் நோய்ப் பூச்சி மருந்தாகும். பென்சைல் பென்சோபேற் (4 ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசன்துறை பாதையை திறந்துவிட புலிகள் இணக்கம்

## முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு வலியுறுத்து: உணவு நெருக்கடியை தீர்க்க முயற்சி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணக் குடாநாட்டில் எழுந்துள்ள உணவு நெருக்கடியைத் தீர்த்துவைக்கும் பொருட்டு காங்கேசன்துறை பாதையை திறந்துவிடுவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. ஆயினும் இப்பாதையை திறந்துவிடுவதற்கு விடுதலைப் புலிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சிறிலங்கா அரசாங்கம் ஆகிய முத்தரப்பினர் மத்தியில் ஒரு உடன்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் இவ்வுடன்பாட்டு விதிகளை அரசபடைகள் மீறக்கூடாது என்றும் புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

போக்குவரத்துப் பாதைகள் மூலம் குடாநாட்டிற்குள் உணவுப் பொருள்களை எடுத்துவருவதில் ஏற்பட்டுள்ள தடைகள் காரணமாக யாழ். குடாநாட்டில் எழுந்துள்ள உணவு நெருக்கடியைச் சீர் செய்யும் நோக்கில் காங்கேசன் துறை துறைமுகம் ஊடாக குடாநாட்டிற்குள் உணவுப் பொருள்களைக் கொண்டுவருவதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கப்படும் உணவுப் பொருள்கள் தரைமார்க்கமாக லொறிகள் மூலம் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு வந்துசேர முடியும்.

இதேவேளை இப்பாதையைத் திறந்து விடுவதனால் விடுதலைப் புலிகள் - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சிறிலங்கா அரசாங்கம் ஆகிய முத்தரப்பினருக்கும் இடையில் ஓர் உடன்பாடு காணப்பட வேண்டும் எனவும், இதனை சிறிலங்கா இராணுவம் உறுதியாகக் கடைப்பிடிப்பதற்கு உறுதி அளிக்க வேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் கோரியிருப்பதாக புலிகள் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதின் அடிப்படையில் காங்கேசன்துறை துறைமுகப் பாதையைத் திறக்க ஏனைய தரப்பினர் சம்மதித்தால் எந்த வீதியைப் பயன்படுத்துதல் எந்தெந்த நேரத்திற்குள் பயணங்கள் மேற் கொள்வது போன்ற விடயங்கள் பின்னர் ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## க.பொ.த.உயர்தரப் பரீட்சை

### யாழ். மாவட்டத்தில் 12 பேருக்கு 4 ‘ஏ’ சித்தி

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் 12பேர் க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர். அண்மையில் கொழும்பில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி நாடு முழுவதும் 96பேர் நான்கு பாடத்திலும் அதி விசேட சித்தி பெற்றுள்ளனர். இவர்களில் 46 பேர் கொழும்பு மாவட்டத்தையும் 12 பேர், யாழ். மாவட்டத்தையும் 12 பேர் காலி மாவட்டத்தையும் 8பேர் கண்டி மாவட்டத்தையும் சேர்ந்த பரீட்சார்த்திகளுமாவர். இவர்களில் 44 பேர் பொறியியல் பாடங்களிலும், 35 பேர் வர்த்தகப் பாடங்களிலும் 8 பேர் கலைப் பாடங்களிலும் 6பேர் மருத்துவப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர். இதில் யாழ். இந்துக் கல்லூரியில் மூன்று மாணவர்கள் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை தோற்றிய 1,31,556 பேரில் 54937 பேர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் மருத்துவ விஞ்ஞானத் துறையில் 7837 பேரும், பொறியியல் துறையில் 3758 பேரும், வர்த்தக துறையில் 16,999பேரும் கலைத்துறையில் 26343 பேரும் தகுதி பெற்றுள்ளனர்.

### கற்பிட்டி சென்ற படகில் வெடிப்பொருள்கள் மீட்பு

-ஒருதமிழர் கைது

(கொழும்பு)

மன்னாரிலிருந்து கற்பிட்டி நோக்கி வந்த படகொன்றிலிருந்து ஐந்து கிலோ கிராம் எடையுடைய வெடிப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இப் படகில் மன்னாரிலிருந்து பல தமிழர்கள் கற்பிட்டி வந்ததாகவும், அவர்களில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் மேலும் கூறப்பட்டுள்ளது. கடற்படையினர் மேற்படி நபரை விசாரித்த போது கொழும்பில் இருக்கும் புலிகள் குழுவொன்றிற்கு வெடிப் பொருள்களும், டெட்டனேட்டர்களும் கடத்திக் கொடுத்திருப்பதாகக் கூறியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கைதானவரை விடுவிக்க லஞ்சம் கேட்டவர் கைது

இராணுவத்தால் கைது செய்யப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த குமார குருசிங்கம் என்ற இளைஞரை விடுவிக்க ரூபா 20,000 உறவினரிடம் கேட்ட நபர் ஒருவர் ஊருகஸ் மத்தியபொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

மேற்குறிப்பிட்ட தமிழ் இளைஞர் முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இவரது உறவினரிடம் கூறி குறித்த தொகை பணத்தை கொடுத்தால் இவரை விடுவிக்க முடியுமென கூறினாராம்.

### வீரவணக்கம்

லெப். வெள்ளைத்தேவன்

யாழ்ப்பாணத்தில் சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் மரணமடைந்தார்.

லெப்டினன்ட் வெள்ளைத்தேவன் (கனகசபை ஜெயதாசன் சந்தை வீதி, சங்கானை) என்பவரே மரணமடைந்தவராவர்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### குண்டு வெடித்து இளைஞர் காயம்

[யாழ்ப்பாணம்]

அளவெட்டிப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற இளைஞர் ஒருவர் இராணுவத்தால் கைவிடப்பட்ட வெடிகுண்டு வெடித்ததினால் படுகாயமடைந்துள்ளார்.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த எஸ். சிவானந்தன் (வயது 28) என்பவர் நேற்று [4-ம் பக்கம் பார்க்க]

## பூநகரி பாதையை திறக்கவும் விடுதலைப்புலிகள் சம்மதம்

(யாழ்ப்பாணம்]

குடாநாட்டுமக்களின் போக்குவரத்திற்கு வசதி அளிக்கும் ... டும் எனவும் புலிகள் இயக்கம் நிபந்தனை விதித்துள்ளது.

யாழ்ப்பாணமக்களின் போக் ... வாபஸ் பெறச் செய்ய வேண்டும் எனவும் புலிகள் இயக்கம் கருத்துத் தெரிவித்துள்ளது.

## பாரிய தாக்குதலுக்கு திட்டம் இல்லையாம்.

வட பகுதியில் பாரிய யுத்த நடவடிக்கை எதற்கும் திட்டமிடப்படவில்லை என்றும், ... பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்:

லிருந்து ஐந்து கிலோ கிராம் எடையுடைய வெடிப்பொருள் கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இப் படகில் மன்னாரிலிருந்து பல தமிழர்கள் கற்பிட்டி வந்ததாகவும், அவர்களில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் ஒருவர் மேலும் கூறப்பட்டுள்ளது. கடற்படையினர் மேற்படி நபரை விசாரித்த போது கொழும்பில் இருக்கும்புலிகள் குழுவொன்றிற்கு வெடிப் பொருள்களும், டெட்டனேட்டர்களும் கடத்திக் கொடுத்திருப்பதாகக் கூறியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கைதானவரை விடுவிக்க லஞ்சம் கேட்டவர் கைது

இராணுவத்தால் கைது செய்யப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த குமார குருசிங்கம் என்ற இளைஞரை விடுவிக்க ரூபா 20,000 உறவினரிடம் கேட்ட நபர் ஒருவர் ஊருகஸ் மத்தியபொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

மேற்குறிப்பிட்ட தமிழ் இளைஞர் முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இவரது உறவினரிடம் கூறி குறித்த தொகை பணத்தை கொடுத்தால் இவரை விடுவிக்க முடியும்என கூறினாராம்.

## படைத் தளபதிகள் வடகிழக்கு விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா கூட்டுப்படை தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்ரன் வனசிங்கா யாழ். குடாநாட்டின் முக்கிய இராணுவத் தளங்களுக்கு நேற்று முன்தினம் சென்று திரும்பியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பலாலி, இடைக்காடு, காங்கேசன்துறை, மாதகல், ஊர்காவற்றுறை ஆகிய முகாம்களுக்கு சென்ற அவர் அங்குள்ள படையினருக்குப் புத்தாண்டுப் பரிசில் பொருள்களை வழங்கியதுடன் அவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் "புத்தாண்டில் தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு படையினர் அனைவரும் துணிச்சலோடும், வீரத்தோடும் போராட வேண்டும்" என வாழ்த்தினார்.

சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தின அம்பாறை இராணுவப் பயிற்சி நிலையத்தில் புத்தாண்டு உரை நிகழ்த்துகையில் "ஒரு யுத்தத்தில் வெற்றி பெற ஒழுக்கமும் பயிற்சியும் அவசியம்" என குறிப்பிட்டார்.

## ஊர்காவல் படைக்கு ஆயுதம் வழங்கத் தயக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா ஊர்காவல்படையினருக்கு வழங்கப்படும் துப்பாக்கிகள் அடிக்கடி 'காணாமல்' போவதனால் கடமை முடிந்ததும் துப்பாக்கிகளைப் பொலிசாரிடம் ஒப்படைக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காலையில் துப்பாக்கிகளைப் பொலிசாரிடம் ஒப்படைத்த பின்னர் மாலையில் அவற்றை மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி பெலியத்த பொலிசார் தெரிவித்துள்ளனர்.

முன்னூறுக்கு மேற்பட்ட ஊர்காவல் படையினர் உள்ள இப்பகுதியில் இவ்வாறு துப்பாக்கிகளை ஒப்படைக்கவும், மீளப்பெறவும் தினமும் 3 மணித்தியாலங்களுக்கு மேல் பிடிப்பதால் கடமையை ஒழுங்காகச் செய்ய முடியவில்லை என முறையிட்டுள்ளனர்.

## யுத்தவிமான கொள்வனவில் 'கமிசன்' எதுவும் இல்லையாம்

[கொழும்பு]

விமானக் கொள்வனவிற்கு கமிசன் எதுவும் வழங்கப்படவில்லை. என்று சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

கடந்த வாரத்தில் ராவய பத்திரிகைவெளியிட்ட தகவலொன்றில் விமானக் கொள்வனவின் போது பாரிய கமிசன் வழங்கப்பட்டதாகவும், விமானப்படைத் தளபதியின் விருப்பத்திற்கு மாறாகவே இவை கொள்வனவு செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டதை பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் திட்டவட்டமாக மறுத்துள்ளன.

இதேவேளை விமானக்

[4-ம் பக்கம் பார்க்க]

போக்குவரத்துப் பாதைகள் மூலம் குடாநாட்டிற்குள் உணவுப் பொருள்களை எடுத்துவருவதில் ஏற்பட்டுள்ள தடைகள் காரணமாக யாழ். குடாநாட்டில் எழுந்துள்ள உணவு நெருக்கடியைச் சீர் செய்யும் நோக்கில் காங்கேசன் துறை துறைமுகம் ஊடாக குடாநாட்டிற்குள் உணவுப் பொருள்களைக் கொண்டுவருவதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கப்படும் உணவுப் பொருள்கள் தரை மார்க்கமாக லொறிகள் மூலம் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு வந்துசேர முடியும்.

இதேவேளை இப்பாதையைத் திறந்து விடுவதனால் விடுதலைப் புலிகள் - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சிறிலங்கா அரசாங்கம் ஆகிய முத்தரப்பினருக்கும் இடையில் ஓர் உடன்பாடு காணப்பட வேண்டும் எனவும், இதனை சிறிலங்கா இராணுவம் உறுதியாகக் கடைப்பிடிப்பதற்கு உறுதி அளிக்க வேண்டும் எனவும் புலிகள் கோரியிருப்பதாக புலிகள் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதின் அடிப்படையில் காங்கேசன்துறை துறைமுகப் பாதையைத் திறக்க ஏனைய தரப்பினர் சம்மதித்தால் எந்த வீதியைப் பயன்படுத்துதல் எந்தெந்த நேரத்திற்குள் பயணங்கள் மேற் கொள்வது போன்ற விடயங்கள் பின்னர் ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## குண்டு வெடித்து இளைஞர் காயம்

[யாழ்ப்பாணம்]

அளவெட்டிப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற இளைஞர் ஒருவர் இராணுவத்தால் கைவிடப்பட்ட வெடிகுண்டு வெடித்ததினால் படுகாயமடைந்துள்ளார்.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த எஸ். சிவானந்தன் (வயது 28) என்பவர் நேற்று

[4-ம் பக்கம் பார்க்க]

# பூநகரி பாதையை திறக்கவும் விடுதலைப்புலிகள் சம்மதம்

(யாழ்ப்பாணம்)

குடாநாடடுமக்களின் போக்குவரத்திற்கு வசதி அளிக்கும் முகமாகப் பூநகரிப் பாதையை திறந்து விட விடுதலைப்புலிகள் இயக்கம் சம்மதம் தெரிவித்துள்ளது. அதே வேளை அப்பகுதியில் இருந்து படைகள் வாபஸ் பெறப்படவேண்டும் எனவும் புலிகள் இயக்கம் நிபந்தனை விதித்துள்ளது.

யாழப்பாணமக்களின் போக்குவரத்து நெருக்கடியை மனிதாபிமானத்தின் அடிப்படையில் சிறிலங்கா அரசாங்கம் தீர்க்க விரும்பினால் ஒரு நல்லெண்ண முயற்சியாக படைகளை அப்பகுதியிலிருந்து வாபஸ் பெறச் செய்ய வேண்டும் எனவும் புலிகள் இயக்கம் கருத்துத் தெரிவித்துள்ளது

இந்த யோசனையை விடுதலைப்புலிகள் இயக்கம் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்திற்கும் தெரிவித்துள்ளது.

## பாரிய தாக்குதலுக்கு திட்டம் இல்லையாம்.

வட பகுதியில் பாரிய யுத்த நடவடிக்கை எதற்கும் திட்டமிடப்படவில்லை என்றும், இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் அங்கம்மன கூறியுள்ளார்.

கொள்ளுப்பிட்டி இராமோதயசபை மண்டபத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்: ஆனையிறவு. பலாலி இராணுவ தளங்களில் படையினர் வழக்கமாகவே உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## குடாநாட்டுப் பிரச்சினை; அரசிற்கு விளக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் யாழ். குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் அரச உயர் அதிகாரிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் இன்று கொழும்பிற்குப் புறப்பட்டுச் செல்கின்றார்.

இவர் இன்று மாலை பருத்தித்துறைக்குச் சென்று அங்கிருந்து கப்பல்மூலம் காங்கேசன்துறைக்குச் சென்று பின்னர் பலாலி விமானநிலையத்தில் இருந்து விமானமூலம் கொழும்பிற்கு புறப்பட்டு செல்லவுள்ளார். கொழும்பு சென்றதும் அங்கு யாழ் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் உணவுப் பிரச்சினை, போக்குவரத்துப் பிரச்சினை, மருந்துப் பிரச்சினை மற்றும் சிறிலங்கா படையினர் மக்கள் குடிமனைகள்மீது அடிக்கடி மேற்கொள்ளும் தாக்குதல்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துவிளக்கி அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளார் என தெரியவருகின்றது. (பா)

## இராணுவ நடவடிக்கை தீர்வாக அமையாது

- பிரேமதாஸா

[கொழும்பு]

"இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வாக அமையாது" என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸா புத்தாண்டு செய்தியில் கூறியுள்ளார்.

"பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலிவாங்கியுள்ள போருக்கு முற்றுப்புள்ளி வைக்க இருதரப்பு நம்பிக்கை கட்டி எழுப்பப்பட வேண்டும்.

இந்த நாடு பிளவுபடாமல் கட்டிக் காக்கும் இராணுவத்தினருக்கு நன்றி செலுத்தும் அதேவேளை நாட்டின் வலிமை அனைத்தையும் திரட்டி நாட்டின் குழப்ப நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க உறுதி பூண்டுள்ளேன்" என மேலும் அவர் தெரிவித்தார்.

# புலிகள் இல்லாத தீர்வு பயன் தரப் போவதில்லை

(கொழும்பு)

- விஜீத்த யாபா

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுவது அவசியம் விடுதலைப் புலிகளை விலக்கி விட்டு எடுக்கப்படும் எந்த ஒரு அரசியல் தீர்வும் பயன் தர மாட்டாது." இவ்வாறு முன்னாள் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் விஜீத்த யாபா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு தீர்வு காண்பதில் பல சிக்கல்களை அரசாங்கம் எதிர்கொள்கிறது. ஆனால் இப்பிரச்சினைக்கு தெளிவான ஒரு தீர்வு அவசியமானது. அரசியல் தீர்வை விட்டு இராணுவத் தீர்வை நோக்கி செல்லுதல் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு உகந்ததல்ல.

"தமிழர்கள் சகல உரிமைகளையும் கொண்ட பிரஜைகளாக வாழவேண்டும். அரசியல் வாதிகளின் ஏமாற்றுக்களாலேயே இன்று அவர்கள் ஆயுதம் ஏந்தியுள்ளனர். இந்நிலைக்கு காரணம் அவர்களுக்கு ஜனநாயக அரசியலில் ஏற்பட்ட அவநம்பிக்கையும் சிங்கள அரசியல் வாதிகளால் இழைக்கப்பட்ட துரோகங்களும் ஆகும்.

"சிங்கள மக்களும் சிறுபான்மையினரின் உரிமையை வென்றெடுக்க உதவிசெய்ய வேண்டும். யுத்தத்தை நோக்கி நாம் செல்லச் செல்ல தமிழ்-சிங்கள மக்களிடையே மேலும் பிளவுகள் அதிகரித்துச் செல்கின்றன. எனவே வடக்கு, கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரத் தேவையான பேச்சுவார்த்தைகளே நியாய

[4-ம் பக்கம் பார்க்க]

## பகுதிநேர ஆசிரியர்கள் கடமையாற்ற அனுமதி

பகுதி நேர ஆங்கில உதவி ஆசிரியர்களாக 1992இல் நியமனம் பெற்ற அனைவரும் தொடர்ந்தும் மறு அறிவித்தல் வரை சேவையாற்ற அனுமதிக்கப்படுவார்களென யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மிக விரைவில் அனுப்பிவைக்கப்படுமென்றும் மேலும் 1992 இல் பகுதி நேர ஆங்கில உதவி ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களின் சேவை தொடர்ந்தும்தேவைப்படாத பாடசாலை அதிபர்கள் அதுபற்றி உடனடியாக அறிவிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார். 31-12-92 இல் 65 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் தொடர்ந்தும் சேவையாற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள எனவும் அவர் மேலும் தெரிவித்தார். [பா]

## கல்வி நிர்வாக அதிகாரிகள் பணிப்பாளரால் இடமாற்றம்

யாழ். பிரதேச கல்விக்கோட்டங்களைச் சேர்ந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் மூவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த இடமாற்ற உத்தரவுகள் யாழ். கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ளன.

திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. வீரபத்திரன் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்திற்குப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், சாவகச்சேரிக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

[4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### வியாபாரிகளுக்கு

இமிரேசன் கோல்கவரின் நகைகள், மணப்பெண்களின் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள், வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதன பொருட்கள், எவர்சில்வர் பொருட்கள் மொத்தமாக பெற்றுக்கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177A மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3902)

### நீமோல்-கிருமிநாசினி

நோய் பரப்பும் கிருமிகளை ஒழிக்க, ஈ, நுளம்பு, கரப்பான் பூச்சிகளை விரட்டியடிக்க 'நீமோல்''

கழிவறைகளைச் சுகாதாரமாக வைத்திருக்க 'நீமோல்'' நீமோல் அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகின்றன. ''மில்க்வைற்'' (சி/5682)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள் சுவர் மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (சி-5679)

### மிருதங்கம்

நீங்கள் விரும்பும் அளவுக்கேற்ப புதிய மிருதங்கம் குறித்த தவணையில் ஓடருக்கு செய்து தரப்படும்.

கோவிந்த பிள்ளை விஜயகுமார் மிருதங்க தொழில் நிலையம் 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (3884)

### மகாதேவா ஜோதிடம்

1993-ம் ஆண்டுப் பலாபலன் எங்கும் விற்பனையாகின்றது. நேரடியாகச் சந்திக்கலாம். காலை 9-00 மணியிலிருந்து. 140, செல்லர் வீதி, கல்வியங்காடு. நல்லூர். (3880)

### தவறிவிட்டது

மந்திகையைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவராசாவின் பஸ் லைசென்ஸ். அடையாள அட்டை என்பன பூநகரி ஆலடி

# வவுனியா ரயில்நிலையத்தில் பயணிகளிடம் கொள்ளை

யாழ். கொக்குவிலைச் சேர்ந்த டாக்டர் குடும்பம் நகைகளையும் பல ஆயிரம் ரூபாய்களையும் திருடரிடம் பறிகொடுத்த பரிதாப சம்பவமொன்று கடந்த திங்கட்கிழமை வவுனியா ரயில் நிலையத்தில் நடைபெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது: கனடா செல்வதற்காக கொக்குவிலிருந்து வவுனியா வந்த மூவர் அடங்கிய டாக்டர் ஒருவரின் குடும்பத்தினரிடமிருந்து 15 பவுண் நகைகளும் பல ஆயிரம் ரூபா பணமும் வவுனியா ரயில் நிலையத்தில் மாயமாக மறைந்து விட்டதாம்.

இது தொடர்பாக டாக்டர் வவுனியா ரயில்நிலைய பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

# வவுனியாவில் வாகன சோதனை இராணுவத்தின் புதிய ஏற்பாடு

வவுனியா விவசாயப் பாடசாலை அருகில் அமைந்துள்ள இராணுவத்தின் வாகன சோதனை நிலையம் மூடப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்திய வாகனங்களும் ஈரப்பெரிய குளம் வாகன சோதனை நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றன.

தாண்டிக்குளம் சோதனை நிலையத்தைத் தாண்டி வந்த வாகனமொன்றில் பெருந்தொகையான தடை செய்யப்பட்ட பொருள் காணப்பட்டதை அடுத்தே ஈரப்பெரிய குளத்தில் வவுனியா நகரில் கொள்வனவு செய்து கொண்டு வரப்பட்ட பொருள்கள் ஈரப்பெரிய குளம் சோதனை முகாமில் சோதனைக்குட்படுத்தப்படுகின்றனவாம். (தி)

# கல்வி உபகரணங்களுக்கு ராணுவம் கட்டுப்பாடு

(வவுனியா)

வவுனியா பேயாடிகூழாங்குளம் இராணுவ சோதனை முகாமில் மிக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அப்பியாசப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

பெருந்தொகையில் எடுத்து வரப்படும் இவ்வாறான கல்வி உபகரணங்கள் இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்படுகிறது. இதனால் வடபகுதிப் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். (தி)

# றொனி சரத் ரணவாக்கே மோதல்; புளத் சிங்களவில் பொலிஸ் குவிப்பு

(கொழும்பு)

முன்னாள் நிதிஅமைச்சரும், அண்மையில் லண்டனிலிருந்து திரும்பியவருமான றொனி டி. மெல்லின் ஆதரவாளர்களுக்கும், புளத்சிங்கள தொகுதியின் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரான ஐதேகட்சியின் சரத் ரணவாக்கேயின் ஆதரவாளர்களுக்கும் இடையே கோஷ்டி மோதல்கள் உருவெடுக்கலாம் என்றஅச்சத்தின் காரணமாக அங்கு பொலிசார் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். வீதிரோந்து நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிறு அன்று மாலையில் இந்த இருகோஷ்டியினருக்கும் இடையே நடந்த மோதலில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தால் ஒருவர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தது தெரிந்ததே.

றொனிடிமெல்லும் அவரது ஆதரவாளர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொடியை பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேட முயல்வதாக தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரான சரத் ரணவாக்கேயின் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர் இதேவேளை தன்னைக் கொல்ல சதிடப்பதாகவும், ஞாயிறன்று நடந்த துப்பாக்கிப் பிரயோகம் தனக்கு குறிவைத்தே நடத்தப்பட்டதாகவும் றொனிடிமெல் கூறியுள்ளார்

புளத்சிங்களபகுதியில், ஞாயிறன்று நடந்த கலவரம் திட்டமிட்ட ஒருசெயல் எனக் கருதும் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது கொல்லப்பட்டவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையான மத்துமவைச் சேர்ந்த கருணாசேன என்று இனங்கண்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக எவரையும் பொலிசார் இன்னமும் கைது செய்யவில்லை என்றபோதும், றொனியிடமிருந்தும் சரத்ரணவாக்கேயிடமிருந்து தனித்தனி வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை முன்னாள் அமைச்சர் றொனிடிமெல், சாணக்ய அமரதுங்காவின் லிபரல் கட்சியில் சேரலாம் என்றும் தற்போது கூறப்படுகிறது.

# பரீட்சை விடைத்தாள்கள் திருத்துவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சாதாரணதர பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் கொழும்பில் ஆரம்பமாகி விட்டன

இவற்றின் திருத்த வேலைகள் கடந்த 26ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகின. ஆனால் போக்குவரத்து சிரமத்தினால் யாழ். மாவட்ட விடைத்தாள்கள் இதுவரை அங்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்பது தெரிந்ததே

இன்னும் ஓரிரு தினங்களில் ஏனைய மாவட்ட விடைத்தாள்கள் திருத்தும்வேலைகள் பூர்த்தியடைந்துவிடும் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டாம் கட்டமாக வடபகுதி விடைத்தாள்கள் திருத்தப்படவுள்ளதாகவும் இவை பெரும்பாலும் முஸ்லிம் ஆசிரியர்களாலேயே திருத்தப்படலாம் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### கால்நடைகளுக்கு தடுப்பூசி

நெடுங்கேணிப் பிரதேசத்தில் அமைந்துள்ள பட்டிப்பிலவு, தண்டுவான் மாமடுச் சந்தி, 17ஆம் கட்டை ஆகிய கிராமங்களில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் 18 பண்ணைகளை சேர்ந்த 412 கால்நடைகளுக்கு நோய்தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

கடந்த ஐப்பசிமாதம் 14ஆம் 15ஆம் திகதிகளில் போடப்பட்ட இவ் ஊசியானது கால்நடைகளுக்கு நோய்ஏற்படாத வகையில் முன்னேற்பாடாக செய்யப்பட்ட ஓர்நடவடிக்கை ஆகும்.

### நிர்வாகிகள் தெரிவு

அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 1993ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக வி. சுந்தரலிங்கம், செயலாளராக அ. அமிர்தநாயகம், பொருளாளராக ச. ஸ்ரீதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# வடபகுதியில் பாடசாலைகள் மூடப்படுவது கிடையாது

-இராஜாங்க அமைச்சர் அஸ்வர்

(கொழும்பு)

வடபகுதியில் யுத்தம் நடப்பது உண்மைதான். ஆனால் ஒருநாள்கூட பாடசாலைகள் மூடப்படுவது கிடையாது இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் அவர்கள் படிக்கின்றார்கள் என்று முஸ்லிம் கலாசார இராஜாங்க அமைச்சர் ஏ.எச். எம் அஸ்வர் கூறியுள்ளார்.

பதுளையில் முஸ்லிம் பாடசாலையின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; இன்று எம்மிடம் இருக்கும் வசதிகள் அவர்களிடம் இல்லை. ஆனாலும் அவர்கள் தமது வசதியீனங்களை பொருட்படுத்தாது கல்வியை தொடர்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

# ஆத்மார்த்த அஞ்சலி



மண்ணில் மலர்வு: 08 | 09 | 1987

விண்ணுயர்வு: 02 | 12 | 1992

## செல்வி அனிற்றா அனந்தி (ஜெயமேரி) கீதா பொன்கலன்

அனந்தியின் மறைவால் துயருற்றிருக்கும் துறைத்தலைவர் விரிவுரையாளர் திரு. கீதா பொன்கலன் குடும்பத்தவர்கள், உறவினர்களுக்கு

# வவுனியாவில் பயணிகள்மீது ஹெலி தாக்குதல்

(வவுனியா)

வவுனியாவில் தமிழ்ப் பயணிகள் நூற்றுக்கணக்கில் குழுமியிருந்த பகுதி ஒன்றை நோக்கி உலங்கு வானூர்தியிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 23ஆம் திகதி மத்தியான வேளையில் பறநட்டகல் டஸ்தரிப்பு இடத்தை அண்டிய பகுதியை நோக்கியே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. நத்தார் பண்டிகையை ஒட்டி தென்பகுதியிலிருந்து வந்த பயணிகள் இப்பகுதியிலிருந்து பீதியடைந்த நிலையில் பதறி ஓடினார்கள்.

பல நிமிடங்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எவரும் பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இத் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது வீடுஒன்று சேதமடைந்தது. [தி]

# வவுனியாவில் இராணுவ கெடுபிடி பெருமளவில் அதிகரிப்பு

[வவுனியா]

வவுனியா இராணுவ சோதனை முகாமில் இராணுவ உளவாளிகளின் கடுமையான நடவடிக்கையினால் தமிழ்ப் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

வடபகுதியிலிருந்து பெரும் கஷ்டத்தின் மத்தியில் தென் ... படுத்துகின்றது.

மேற்படி உளவாளிகள் வடபகுதியின் நிலபரங்கள் பற்றியும் போராளிகளின் நடமாட்டங்கள் பற்றியும் மிகவற்புறுத்தி பயணிகளிடம் தகவல்கள் பெற முயற்சிக்கின்றனர். தகவல்கள் கூறமறுகின்றவர்கள் தாக்கப்படுகின்றனர். பல

# சிறுபோக விவசாயத்திற்கு புதிய நடைமுறை முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறுபோக விவசாயச் செய்கைக்கென புதிய விவசாயத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது

இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு விவசாய சேவைகள் திணைக்களமும், சில அரச சார்பற்ற நிறுவனங்களும் முன் வந்துள்ளன யாழ் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற கூட்டமொன்றில் மேற்படி விவசாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான முடிவு மேற்கொள்ளப்பட்டது

எதிர்வரும் சிறுபோகத்தின் போது பயறு, எள்ளு, குரக்கன் போன்ற சிறுதானிய வகைகள் மேற்படி விவசாயத் திட்டத்தில் பயிரிடப்படவிருக்கிறது.

இதற்காக குடாநாட்டுக்கு வெளியில் இருந்து விதை பொருள்களை எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய கூட்டத்தில் விவசாய சேவைகள் திணைக்கள அதிகாரிகள், யாழ் செயலக அதிகாரிகள், மற்றும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டு தமது ஆலோசனைகளை வழங்கினர். (க)

# நினைவு கூருகின்றோம்...

1993-01-02

த்த தவணையில் ஒடருக்கு செய்து தரப்படும்.

கோவிந்த பிள்ளை விஜயகுமார் மிருதங்க தொழில் நிலையம் 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (3884)

## மகாதேவா ஜோதிடம்

1993-ம் ஆண்டுப் பலாபலன் எங்கும் விற்பனையாகின்றது. நேரடியாகச் சந்திக்கலாம். காலை 9-00 மணியிலிருந்து. 140, செல்லர் வீதி, கல்வியங்காடு. நல்லூர். (3880)

## தவறிவிட்டது

மந்திகையைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவராசாவின் பஸ் லைசென்ஸ் அடையாள அட்டை என்பன பூநகரி ஆலடியில் கடந்த 24ஆம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புலோலி ப நோ. கூ. சங்கத்திடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி/5694)

## ஆருத்திரா தரிசனம்

நல்லூர் சட்டநாதர் ஆலயத்தில் தற்போது நடைபெறும் திருவெம்பாவை உற்சவத்தின் ஒன்பதாம் நாளன்று காலையில் தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை வெள்ளிக் கிழமையன்று ஆருத்திரா தரிசனமும் நடைபெறவுள்ளது

பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ் 1991/92

## கற்கைநெறி விரிவுரைகள்

பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிழ்க் கற்கை நெறிக்கான விரிவுரைகள் முழுநேர ஆசிரிய மாணவர்களுக்கு 1993 01.04 ஆம் திகதியும், பகுதிநேர ஆசிரிய மாணவர்களுக்கு 1993 01.09 ஆம் திகதியும் ஆரம்பமாகும் தனிபபட்ட கடிதங்கள் அனுப்பப்படமாட்டா.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்
1992.12.29
[சி/5685]

08 | 09 | 1987 — 02 | 12 | 1992



## செல்வி அனிற்றா அனந்தி (ஜெயமேரி) கீதா பொன்கலன்

அனந்தியின் மறைவால் துயருற்றிருக்கும்
துறைத்தலைவர் விரிவுரையாளர்
திரு. கீதா பொன்கலன்
குடும்பத்தவர்கள், உறவினர்களுக்கு
ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப்பதோடு
ஆத்ம அஞ்சலிக்காகப் பிரார்த்திக்கிறோம்.

N. C. A. T
இறுதியாண்டு மாணவர்கள்
யாழ் / தொழில்நுட்பக் கல்லூரி
யாழ்ப்பாணம்
(சி-5693)

## 41-ம் நாள் நினைவஞ்சலி

வீரத்திற்காக — 29 — 12 — 1975

விடிவுக்காக — 24 — 11 — 1992



## 2-ம்லெப். காயத்திரி

[கோவிந்தன் தவச்செல்வி]

விழிகளில் தீ சுமந்தாய்
வீரமுடன் நடந்தாய்
விடுதலைப் பாதையிலே
வேகமுடன் விரைந்தாய்
அஞ்சிடோம் - எதிரிக்கு
இம மண்ணில் இடம்கொடோம்
என்று அறைகூவி
விழிமூடிய வேங்கையே,
எந்நாளும் உன்கொள்கை நாம் மறவோம்
உன் வழியில் எம் பாதம் நாம் பதிப்போம்

ஊறணி
வல்வெட்டித்துறை (3893)
- குடும்பத்தினர்

உலங்கு வானூர்தியிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 23 ஆம் திகதி மத்தியான வேளையில் பறநட்டகல் டஸ்தரிப்பு இடத்தை அண்டிய பகுதியை நோக்கியே இத்தாக்குதல் மேற்கொள்...யிலிருந்து பீதியடைந்த நிலையில் பதறி ஓடினார்கள்.

பல நிமிடங்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எவரும் பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இத் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது வீடொன்று சேதமடைந்தது. [தி]

## வவுனியாவில் இராணுவ கெடுபிடி பெருமளவில் அதிகரிப்பு

[வவுனியா]

வவுனியா இராணுவ சோதனை முகாமில் இராணுவ உளவாளிகளின் கடுமையான நடவடிக்கையினால் தமிழ்ப் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

வடபகுதியிலிருந்து பெரும் கஷ்டத்தின் மத்தியில் தென்பகுதி நோக்கிச் செல்லும் பயணிகளை இராணுவம் பெரும் நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்துகின்றது.

மேற்படி உளவாளிகள் வடபகுதியின் நிலபரங்கள் பற்றியும் போராளிகளின் நடமாட்டங்கள் பற்றியும் மிகவற்புறுத்தி பயணிகளிடம் தகவல்கள் பெற முயற்சிக்கின்றனர். தகவல்கள் கூறமறுகின்றவர்கள் தாக்கப்படுகின்றனர். பல பயணிகள் திரும்ப வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். (தி)

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறுபோக விவசாயச் செய்கைக்கென புதிய விவசாயத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது

இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு விவசாய சேவைகள் திணைக்களமும், சில அரச சார்பற்ற நிறுவனங்களும் முன் வந்துள்ளன

யாழ் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற கூட்டமொன்றில் மேற்படி விவசாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான முடிவு மேற்கொள்ளப்பட்டது

எதிர்வரும் சிறுபோகத்தின் போது பயறு, எள்ளு, குரக்கன் போன்ற சிறுதானிய வகைகள் மேற்படி விவசாயத் திட்டத்தில் பயிரிடப்படவிருக்கிறது.

இதற்காக குடாநாட்டுக்கு வெளியில் இருந்து விதை பொருள்களை எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய கூட்டத்தில் விவசாய சேவைகள் திணைக்கள அதிகாரிகள், யாழ் செயலக அதிகாரிகள், மற்றும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டு தமது ஆலோசனைகளை வழங்கினர். (க)

## பற் சிகிச்சை நிலையம்

(கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு எதிரில்)
கே. கே. எஸ். வீதி, கொக்குவில்

**பார்வையிடும் நேரம்:**

| | | |
|---|---|---|
| தினசரி:- | 4.00 பி. ப. | 6,00 பி. ப. |
| ஞாயிறு:- | 10 மு. ப. | 12 ந. ப. |

(3240)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**O/L**

| | | |
|---|---|---|
| DAY CLASSES | பிரிவு I | (8.00- — 2.00) |
| EVENING ,, | பிரிவு III | (3.15 — 6.00) |
| SAT, SUN. ,, | பிரிவு I | (8.00 — 3.00) |

**பிரிவு:-II 6, 7, 8, 9, 10**

**ஆரம்பம்:- 05-01-93**

மு. கு. 6, 7, 8, 9, 10 க்கான பிரிவு III மட்டுமே ஆரம்பிக்கப்படவுள்ளதால் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

★ ஒவ்வொரு பிரிவுகளுக்கும் குறிப்பிட்ட அளவு மாணவர்களே அனுமதிக்கப்படும்.

★ மாணவர்களுக்கு மாதாந்தம் பரீட்சை நடாத்தப்படும்.

★ கணிதம், விஞ்ஞான வகுப்புக்கள் வாரத்தில் நான்கு நாட்கள் நடாத்தப்படும்.

[சி-5667]

## நினைவு கூருகின்றோம்...

**1993-01-02**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் முல்லைத்தீவு தொத்தியாபத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ஈசன் [வைத்திலிங்கம் விக்கினேஸ்வரன் - மாமூலை, தண்ணீரூற்று, முள்ளியவளை - முல்லைத்தீவு]

மட்டக்களப்பு - தாண்டவன்வெளிப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் வயோதிபர்.

1988 ஆம் ஆண்டு அம்பாறை - அக்கரைப் பற்றுச், சாகாமம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

2-ம் லெப். சந்துரு [பொன்னம்பலம் பகிரதன் - அக்கரைப்பற்று-8 - அம்பாறை]

1989 ஆம் ஆண்டு தேசவிரோதக் குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்ட -

★ குணா [சேதுபதி குணரத்தினம் - வீரமுனை, சம்மாந்துறை, கல்முனை - அம்பாறை]

திருக்கோணமலை - மூதூர், முட்டுச்சேனைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஆற்றில் மூழ்கியதில் எமைப் பிரிந்த -

லெப். பலு [ஏகாம்பரம் ஞானசேகரம் - கூனித்தீவு, மூதூர் - திருக்கோணமலை]

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்,

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதக் குழுவினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள் - சுன்னாகம் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990 ஆம் ஆண்டு மன்னார் முசல்குத்திப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

2 ம் லெப். அலெக்ஸ் [இராமலிங்கம் றமேஷ் - இராசேந்திரங்குளம் - வவுனியா]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ்அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5678)

## சிந்தனைக்கு

நம்முடைய முக்கிய குறைபாடு என்னவென்றால், நாம் காரியங்களைச் செய்வதற்குப் பதிலாக, அவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டே காலத்தை கடத்திவிடுகிறோம் என்பதுதான்.

—ஜவஹர்லால் நேரு

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 02-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05

## 1993?

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமாகி, சுமார் இரண்டரை வருடங்கள் பூர்த்தியாகிய நிலையில் 1993 ஆம் ஆண்டு பிறந்துள்ளது. இவ் இரண்டரை வருடப் போரும் இனப்பிரச்சினைக்கு ஓர் இராணுவத் தீர்வை எட்டிவிட முடியாது என்பதை சிறிலங்கா அரசிற்கு உணர்த்துவதற்குப் போதுமானதாகும்.

இந்நிலையில் 1993 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் போரை நடத்துவதா? இல்லை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண முற்படுவதா என்பதைச் சிறிலங்கா அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இனப்பிரச்சினைக்கு நியாயமான, ஏற்புடைய ஓர் தீர்வைக் காணத் தாம் தயாராக இருப்பதாகவும், பேச்சு வார்த்தைக்கான கதவைத் திறந்து வைத்திருப்பதாகவும் தொடர்ந்து அறிவித்தும் வந்துள்ளனர். அதேவேளை, யாழ். குடாநாட்டின் மீது ஒரு பாரிய தாக்குதல் நடைபெறுமானால் பேச்சுவார்த்தை என்பது எக்கட்டத்திலும் சாத்தியமாகப் போவதில்லை எனவும் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவே தொடர்ந்து போரை நடத்துவதா அல்லது சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதா என்பதை நிர்ணயிக்க முடியும். ஆனால், சிறிலங்காவில் நடைபெறும் சம்பவங்களை உற்று நோக்கும் இடத்து இவ்வருடத்திலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தில் இராணுவ செலவீட்டிற்கென பெரும் தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையும், பெரும் ஆயுதத் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றமையும் இவ்வாண்டும் ஒரு போராண்டாக இருக்கும்

# ராணுவம் கைது செய்த 150 தமிழரைக் காணவில்லை

### மனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஆறுமாத காலத்தில் மட்டும் இருநூறு பேர் காணாமல் போயிருப்பதாக இலங்கைக்கான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் நீதிபதியுமான ஜே ஏ எம், சூசா தெரிவித்துள்ளார்,

அவர் மேலும் கூறுகையில்; இவ்வாறு காணாமல் போன இருநூறு பேரில் நூற்றியம்பது பேர்வரையில் தமிழர்கள் என்றும், இந்த நூற்றியம்பது பேரும் திருக்கோணமலை. மட்டக்களப்புப் பிரதேசங்களில் இராணுவத்தினரால் கைது செய்யபபட்ட பின்னரே காணாமல் போயிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் காணாமல்போன ஏனையோர் கட்டுநாயக்கா சீதுவ பகுதிகளில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்ட பின்பே காணாமல் போயிருப்பதாகவும் இவர்களில் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ, மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்ணா ஆகியோரின் இறுதிச் சடங்குகள் கனத்தை மயானத்தில் இடம்பெற்றபோது நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட ஐந்துபேரும்உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்,

## தேங்கியிருக்கும் தபால்களை விரைவில் எடுத்துவர முயற்சி

(கொழும்பு)

யாழ். குடாநாட்டுக்கான சுமார் 1200 தபால் பொதிகள் கொழும்பில் தேங்கிக் கிடக்கிறது. கூட்டுப்படைகளின் அதிகாரிகளின் சோதனை நடவடிக்கைகள் காரணமாகவே இத் தபால் பொதிகள் தேங்கிக் கிடப்பதாக தெரியவருகிறது.

இத் தபால் பொதிகளை காலதாமதமின்றி யாழ். குடாநாடுக்கு அனுப்பிவைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொழும்பில் தங்கியிருக்கும் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் மேற்படி விடயம் தொடர்பாக கூட்டுப்படைகளின் தலைமை அலுவலக அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே மிகவிரைவில் தேங்கிக்கிடக்கும் மேற்படி தபால் பொதிகளை குடா நாட்டுக்கு அனுப்பிவைப்பதற்குரிய சூழ்நிலை உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[பா],[7]

## முன்னைய பாடசாலைகளில் கடமையாற்ற வற்புறுத்து

தற்காலிக இடமாற்றம் பெற்று சேவையாற்றிக் கொண்டிருக்கும் சம்மாந்துறை கோட்டத்தைச் சேர்ந்த சகல ஆசிரியர்களும் நேற்று முதல் தத்தமது சொந்த பாடசாலைகளிற்குக் கடமைக்குத் திரும்பி விட வேண்டுமென்று சம்மாந்துறை கோடடக்கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

தற்காலிக இடமாற்றம் பெற்று சம்மாந்துறைக் கோட்டத்திற்குள்ளேயே ஏனைய பாடசாலைகளிலும், கல்முனை மாவட்டத்தின் கோட்டங்களைச் சேர்ந்த ஏனைய பாடசாலைகளிலும் தற்காலிகமாக சேவையாற்றிக் கொண்டிருக்கும் சம்மாந்துறைக் கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் நேற்றைய தினம் தொடக்கம் தத்தமது சொந்தப் பாடசாலைகளில் கடமையேற்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தவறும் பட்சத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் இடைநிறுத்தப்படும். தவிர்க்க முடியாத காரணங்களிற்காக மேலும் தற்காலிக இடமாற்றத்தை நீடிக்க விரும்பும் ஆசிரியர்கள் தாம் மீண்டும் முன்னைய பாடசாலைகளில் கடமையேற்ற பின்பே மீண்டும் மேன்முறையீட்டை அதிபர் மூலம் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

## சம்பள முற்பணம்

(மானிப்பாய்)

நீண்டகால இடைவெளியின் பின்னர் யாழ் மாநகர சபையில் சேவையாற்றிவரும் ஊழியர்களுக்கு புதுவருட கொண்டாட்டத்திற்கான முற்பணத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இம்முற்பணத் தொகையானது நத்தார் தினத்தில் இருந்து வழங்கப் பட்டு வருகின்றது.

## காட்டுக்குள் இருந்து துப்பாக்கிகள் மீட்பு

எம்பிலிபிட்டிய கல்கந்த காட்டினுள் துப்பாக்கி இரண்டு மீட்கப்பட்டுள்ளன.

எம்பிலிபிட்டிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து காடுகளில் தேடுதல் நடத்திய பொலிஸார் மேற்படி துப்பாக்கி இரண்டையும் கல்கந்த காட்டில் இருந்து மீட்டுள்ளனர்.

## தமிழிளைஞர்கள் 897 பேர் தற்போதும் தடுப்புக்காவலில்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கைச் சேர்ந்த 897 பேர் தற்போது தென் பகுதியில் பொலிஸ் கண்காணிப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

தற்போது பூசா மற்றும் பலவத்தை தடை முகாம்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் மொத்தம் 1709 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பூசாவில் 752 பேரும் பெலவத்தையில் 349 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் புதிதாக கைது செய்யப்பட்ட 24 பேரும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர் ஒய்வூதியம்

## தோட்டப் பாடசாலை சேவையும் கணிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தோட்டப் பாடசாலைச் சேவையை அரச பாடசாலைச் சேவையாக ஓய்வூதியம் கணக்கிடும் போது கணித்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான சுற்று நிருபம் கல்விச் சேவைச் சபைச் செயலாளரால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. இச்சுற்று நிருபத்தினால் ஏறக்குறைய 1500 தமிழர் ஆசிரியர்கள் பயனடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பல வருடங்களாக தோட்டப் பாடசாலைகளில் க. பொ. த சாதாரண பத்திரப் பரீட்சையில் சித்திபெறாது கடமையாற்றிய நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு இச்சுற்று நிருபம் விமோசனமளிக்காதமை கவலையளிப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

1989ஆம் ஆண்டு அமைச்சரவையால் மேற்கொள்ளப் பட்ட தீர்மானத்தை அமுல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இ.த. ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியதற்கமையவே கல்விச் சேவைச் சபையின் செயலாளர் ஏ.எல். வீரரெட்ணா இச்சுற்று நிருபத்தைப் பிரதேச கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பியுள்ளார் என்று இ.த. ஆசிரியர் சங்கத்தின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

க.பொ.த சாதாரண தரம் சித்தியடையாத ஆசிரியர் விடயத்திலும் விசேட அக்கறை காட்டி நீண்ட காலப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் எனக்கோரி சங்கத்தின் செயலாளர் த. மகாசிவம் கல்விச் சேவைச் சபையைக் கேட்டுள்ளார்.

## தங்கநகை அணிந்து வந்த பெண்ணிற்கு இரு மாத சிறை

[வவுனியா]

வெளிநாடு ஒன்றிலிருந்து கொழும்பு வந்து சேர்ந்த தமிழ் இளம் பெண் ஒருவர் பத்துப் பவுண் நகைகளுடன் வடபகுதி நோக்கி வந்தபோது வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டு இரு மாதங்களுக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பத்துப்பவுண் நகைகளை அணிந்து வந்தார் என்கிற ஒரே காரணத்திற்காக சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு இத்தனை நாட்களுக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமில் வைத்து கைதான தம்பி ஐயா. கமலரதி (வயது 26) என்ற வறாத்துப்பளையைச் சேர்ந்த இந்தப்பெண் வவுனியா ஜோசப் இராணுவ முகாமிலேயே தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

# நரசிம்மராவைப் பதவியிறக்க காங்கிரஸ்காரர்கள் முயற்சி

நாடு கடத்தப்பட்ட

## பாலஸ்தீனரை மூன்றாம் நாடு பொறுப்பேற்க வேண்டுமாம்

(டெல்அவிவ்)

நாடு கடத்தப்பட்ட சுமார்

இதேவேளை இந்தப் பாலஸ்தீனியர்களுக்கான உதவிப்

நாட்டின் மீது ஒரு பாரிய தாக்குதல் நடைபெறுமானால் பேச்சுவார்த்தை என்பது எக்கட்டத்திலும் சாத்தியமாகப் போவதில்லை எனவும் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவே தொடர்ந்து போரை நடத்துவதா அல்லது சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதா என்பதை நிர்ணயிக்க முடியும். ஆனால், சிறிலங்காவில் நடைபெறும் சம்பவங்களை உற்று நோக்கும் இடத்து இவ்வருடத்திலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தில் இராணுவ செலவீட்டிற்கென பெரும் தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையும், பெரும் ஆயுதத் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றமையும் இவ்வாண்டும் ஒரு போராண்டாக இருக்கும் என்றே எண்ணத் தோன்றுகின்றது. அதாவது, இராணுவத்தை நவீன மயமாக்குவதன் மூலம், இராணுவத்தில் ஏற்பட்டு வரும் ஆட்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், தற்பொழுது சண்டையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினரின் மனோ நிலையை வளர்த்தெடுக்கவும் அரசாங்கம் திட்டமிடுவதுபோல் தெரிகின்றது.

இதை வலியுறுத்துமாப் போலவே அரசியல் வாதிகளின் அறிவிப்புக்களும் உள்ளன. ஜனாதிபதித் தேர்தல் இடையில் நடைபெற மாட்டாது என்ற திரு. பிரேமதாசாவின் அறிவிப்பும், 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமுன் இனப்பிரச்சினைக்கு இராணுவ அணுகுமுறை மூலம் வெற்றி கண்டு விடலாம் என ஜனாதிபதி பிரேமதாசாவின் வெளிவிவகாரங்களுக்கான அரசியல் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் விடுத்துள்ள அறிவிப்பும், இவ்வாண்டும் தொடர்ந்தும் போர் நடப்பதற்கான அறிகுறிகளாகவே தென்படுகின்றன.

அத்தோடு, தெரிவுக் குழுவின் இறப்பும், சிங்கள அரசியற் கட்சிகள் இனப்பிரச்சினைக்கு முன்னேற்றகரமான தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கத் தவறியமையும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு குறித்து அரசாங்கம் சிறிதளவேனும் நகர முற்படவில்லை என்பதையே காட்டுவதாகவுள்ளது. மேலும் புதிய முயற்சிகள் எதிலும் வெளிப்படையாக அரசு ஈடுபடுவதாகவும் தெரியவில்லை.

இந்நிலையில் 1993 ஆம் ஆண்டும் ஒரு போராண்டாக இருக்கும் என்றே எதிர்வு கூறமுடிகின்றது. ஜனாதிபதி தேர்தல் காலம்வரை போரை தமது இஷ்டத்திற்கு நகர்த்திச் செல்லலாம் என அரசு எண்ணுவதாகவும் தெரிகின்றது. ஆனால், இதன் விளைவுகள் அதற்கு அப்பாலும் நீண்டு செல்லும் என்பதைச் சிறிலங்கா அரசாங்கம் கணிப்பீடு செய்யத் தவறுமானால் இதற்காகப் பின்னர் வருந்த வேண்டிவரும். இராணுவத் தீர்வைத் தான் விரும்பிய மட்டும் நகர்த்திச் சென்று விட்டு தான் விரும்பிய நேரத்தில் நிறுத்திக் கொள்ளலாம் எனப் பிரேமதாசா அரசு எண்ணி விடக் கூடாது. எந்த இராணுவ பலத்தின் முன்னாலும் புலிகளோ அன்றி, தமிழர்களோ பணிந்ததாக இல்லை என்பதை அண்மைக்கால வரலாறே போதிக்கவல்லது.

---

பெற்று சம்மாந்துறைக் கோட்டத்திற்குள்ளேயே ஏனைய பாடசாலைகளிலும், கல்முனை மாவட்டத்தின் கோட்டங்களைச் சேர்ந்த ஏனைய பாடசாலைகளிலும் தற்காலிகமாக சேவையாற்றிக் கொண்டிருக்கும் சம்மாந்துறைக் கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் நேற்றைய தினம் தொடக்கம் தத்தமது சொந்தப் பாடசாலைகளில் கடமையேற்க வேண்டும் என கேட்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

## காட்டுக்குள் இருந்து துப்பாக்கிகள் மீட்பு

எம்பிலிபிட்டிய கல்கந்த காட்டினுள் துப்பாக்கி இரண்டு மீட்கப்பட்டுள்ளன.

எம்பிலிபிட்டிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து காடுகளில் தேடுதல் நடத்திய பொலிஸார் மேற்படி துப்பாக்கி இரண்டையும் கல்கந்த காட்டில் இருந்து மீட்டுள்ளனர்.

...னைத்தல் இருந்து ... யட்டு வருகின்றது.

---

...தமிழ் இளம் பெண் ஒருவர் பத்துப் பவுண் நகைகளுடன் வடபகுதி நோக்கி வந்தபோது வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டு இரு மாதங்களுக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பத்துப்பவுண் நகைகளை அணிந்து வந்தார் என்கிற ஒரே காரணத்திற்காக சிறிலங்கா இராணுவத்தால் ...

கடந்த ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமில் வைத்து கைதான தம்பிஐயா கமலரதி (வயது 26) என்ற வறாத்துப்பளையைச் சேர்ந்த இந்தப்பெண் வவுனியா ஜோசப் இராணுவ முகாமிலேயே தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

---

# நரசிம்மராவைப் பதவியிறக்க காங்கிரஸ்காரர்கள் முயற்சி

[டில்லி]

அயோத்தி சம்பவத்தைத் தொடர்ந்து பிரதமர் நரசிம்மராவைப் பதவியிலிருந்து நீக்க பலர் முயற்சிப்பதாகத் தெரிய வருகிறது.

சோனியாவின் செல்வாக்கைப் பயன்படுத்தி அவரது ஆதரவுடன் பிரதமர் நரசிம்மராவை பதவியிலிருந்து நீக்க பெருமுயற்சிகள் நடந்தன. பிரதமர் பதவிக்கு வரத் துடிப்பவர்கள் அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்ட பின் அடிக்கடி சோனியாவைச் சந்திக்க முயற்சி செய்தனர். ஆனால் இவர்களது பேச்சைக் கேட்க சோனியா மறுத்து விட்டார்.

மசூதி இடிக்கப்பட்ட அன்று முதன் முதல் சோனியாவைச் சந்திக்கச் சென்றவர் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங். கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த அர்ஜுன் முயற்சிக்கிறார் என்று சோனியாவிடம் சொல்லப்பட்டது. இதனால் இவர் அர்ஜுன் சிங்கைப் பார்க்க மறுத்து விட்டார். பிரதமரை மாற்ற எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வர் என். டி. திவாரி சோனியாவைச் சந்தித்து பிரதமர் பற்றி முறையிட்டார். 'கட்சிக் கட்டுப்பாட்டைக் காப்பாற்றுங்கள். ராவ் தலைமைக்கு ஆதரவாக இருங்கள்' என்று திவாரியிடம் அவர் கூறியுள்ளார்.

ஆனால் காங்கிரஸ் கட்சித் தலைமை மாறுகிறது. திவாரி தலைவராகிறார் என்றெல்லாம் புரளி கிளம்பியது. ஆனால் சோனியாவைச் சந்தித்த பின் திவாரி அமைதியாகி விட்டார்.

பிரதமர் மாற்றப்பட மாட்டார் என்பதைத் தெரிந்து கொண்டதும் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் அமைதியாகி அயோத்தி சம்பவத்தை அடுத்து பிரதமருக்கு பக்கபலமாகி விட்டார்.

இப்படி எல்லாம் நடைபெற்றதால் பிரதமர் பதவிக்குக் கட்சி மட்டத்தில் ஆபத்து இல்லை எனக் கூற முடியாது.

பிரதமருக்கு எதிராகச் செயற்படும் அதிருப்தி கோஷ்டியினர் ஆந்திராவில் ஜனார்த்தன ரெட்டி, கர்நாடகாவில் பங்காரப்பா (இருவரும் முன்னாள் முதல்வர்கள்) ஆகியோரது ஆதரவைப் பெறுவதுடன் பிரதமருக்கும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்குமிடையே கருத்து வேறுபாட்டை எழுப்ப முயற்சிக்கின்றனர்.

இதன் மூலம் அ. தி. மு. க. எம். பிக்கள் 11 பேர் ஆதரவு காங்கிரசிற்கு குறையும் பட்சத்தில் பிரதமர் பதவியைக் கைப்பற்றலாம் என கருதுவதாகக் கூறப்படுகிறது.

மேலும் அசாம் முதல்வர் இதேஷ்வர் சைக்கியா, அரியானா முதல்வர் பஜன்லால் ஆகியோரது ஆதரவுகளையும் அதிருப்தி கோஷ்டி பெறமுயற்சிக்கிறது.

## மதசார்பின்மை பேண மக்கள் ஒன்றுபட வேண்டும்

### - பாதுகாப்புத்துறை சரத்பவார்

(டில்லி)

நாட்டின் சமயசார்பற்ற, ஜனநாயகத் தன்மையை பேணிப் பாதுகாத்திட வகுப்பு வாத, மற்றும் பிரிவினைவாத சக்திகளை எதிர்த்துப் போரிட ஒன்றுபடுமாறு பாதுகாப்புத் துறை அமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம், போர்ட் பிளேயரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில் மதம் என்ற பெயரில் மக்களைத் தூண்டிவிட்டு அவர்களைப்பிரிக்க அடிப்படைவாத சக்திகளும், பிற்போக்கு சக்திகளும் முயன்று வருவதாக அவர் குற்றம் சாட்டினார். அண்மையில் நாட்டில் நிகழ்ந்த வகுப்பு மோதல்களுக்கு பாரதீய ஜனதா தான் காரணம் என்றும் குறிப்பிட்டார்.

## அயோத்தியாவில் மசூதி கட்ட கால வரம்புநிர்ணயிக்க முடியாது

### -உள்துறை அமைச்சர் சவான்

[டில்லி]

அயோத்தியாவில் இடிக்கப்பட்ட மசூதியை மீண்டும் கட்டுவதற்கு குறிப்பிட்ட காலவரம்பு ஒன்றை நிர்ணயிப்பது சாத்தியமானதல்ல என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளார்.

பி. ரி. ஐ செய்தியாளரிடம் அவர் மேலும் கூறுகையில்; முழுப் பிரச்சினையுமே நிலத்தைக் கையகப்படுத்துவது மற்றும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு என்பவற்றுடன் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் பிரச்சினையின் தற்போதைய நிலையை மேலும் சிக்கலாக்கும் என்பதால் சர்ச்சைக்கு உட்பட்ட இடத்தில் தொழுகை நடத்த அனுமதிக்கும்படி நெருக்குதல் செய்ய வேண்டாம் என்று முஸ்லிம்தலைவர்களிடம்கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

---

நாடு கடத்தப்பட்ட

## பாலஸ்தீனரை மூன்றாம் நாடு பொறுப்பேற்க வேண்டுமாம்

(டெல்அவிவ்)

நாடு கடத்தப்பட்ட சுமார் நானூறு பாலஸ்தீனியர்களையும் மூன்றாவது நாடு ஒன்று பொறுப்பேற்க வேண்டுமென இஸ்ரேல் கோரிக்கை விடுத்துள்ளது இஸ்ரேல் பிரதமர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தப் பாலஸ்தீனியர்களை இஸ்ரேலோ லெபனானோ ஏற்றுக் கொள்ளமாட்டாது என்றும், எனவே மூன்றாவது நாடொன்று பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை இந்தப் பாலஸ்தீனியர்களுக்கான உதவிப் பொருள்கள் சென்றடைவதில் தடங்கல் ஏற்பட்டிருப்பதாகவும், தனது பிரதேசத்திற்கு ஊடாக உதவிப் பொருள்கள் எடுத்துச் செல்வதை மறுத்துள்ள இஸ்ரேல் லெபனான் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திற்கு ஊடாக உதவிப்பொருள்கள் எடுத்துவர அந்நாட்டரசு இணக்கம் தெரிவித்தால் மட்டுமே தனது அரசும் அவ்விதம் செய்யும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மொகாதிஷ்யூவில் இருமணிநேர கடும் சண்டை

[மொகாதிஷ்யூ]

சோமாலியாவின் தலைநகர் மொகாதிஷ்யூவிற்கு அருகே நேற்று முன்தினமிரவு கடும் சண்டை நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கப் படையினர் சென்று தரையிறங்கியபின்னர் நடைபெற்ற முதலாவது கடும் சண்டை இதுவெனக் கூறப்படுகிறது. சுமார் இரண்டு மணி நேரம் நீடித்த இச்சண்டையில் அயல்நாட்டு இராணுவம் எதுவும் சம்பந்தப்பட்டிருப்பதாக தெரியவரவில்லையென்றும் சோமாலியாவின் இடைக்கால அதிபரான அலி மெகதியின் வலுவான இடங்களிலேயே சண்டை இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இதனிடையே சோமாலியாவில் இருக்கும் அமெரிக்கத்துருப்புக்களின் மனோதிடத்தை ஊக்குவிக்கும் வகையில், அமெரிக்க அதிபர் இரண்டுநாள் சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டிருப்பது தெரிந்ததே.

## சீட்டுப் பிடிப்பதில் ஈடுபட்ட 16 இல. தமிழர் பொலிசாரால் கைது

### – பிரான்ஸில் சம்பவம்

(பாரிஸ்)

பிரான்சில் சீட்டுப் பிடிப்பதில் ஈடுபட்டிருந்த வடபகுதியைச் சேர்ந்த பதினாறு தமிழர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது; வடபகுதியைச் சேர்ந்த சுமார் இருபத்தைந்து பேர் ஏலச் சீட்டு ஒன்றைப் பிடித்ததாகவும், அதில் சம்பந்தப்பட்டிருந்த பெண்மணி ஒருவர் முறைகேடாக நடந்ததைத் தொடர்ந்து கைகலப்பு ஏற்பட்டதாகவும் இக் கைகலப்பு சம்பந்தமாக பொலிசாரிடம் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து அதில் ஈடுபட்ட பதினாறு பேர் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## மருந்து பொருளுக்கும் அனுமதி மறுப்பு

[டெல்அவிவ்]

இஸ்ரேலில் இருந்து நாடு கடத்தப்பட்டு பனிமலையில் தங்கியிருக்கும் 416 பாலஸ்தீனியர்களுக்கு மருந்துப் பொருள்களையோ மருத்துவ குழுவையோ அனுப்ப முடியாதென இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஈழநாதம்

# 9 கோடியா? மாணவரா? அரசு தீர்மானிக்கட்டும்

## பேராசிரியர் நளின் டிசில்வா

(கொழும்பு)
எமக்கு சம்பள உயர்வு வழங்க ஒன்பது கோடி ரூபா வரை தேவைப்படும். ஒன்பது கோடி ரூபா பெரிசா? இந்நாட்டு மாணவரின் எதிர்காலம் பெரிசா? என்பதை ஆட்சியாளர் தீர்மானிக்கட்டும் ''என பேராசிரியர் நளின்டி சில்வா தெரிவித்தார்.

நவல திறந்த பல்கலைக் கழகத்தில் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினார். பல்கலை ஆசிரியர் சம்மேளனத்தினால் 60சதவீத சம்பள உயர்வுகோரி நடாத்தப்படும் போராட்டம் பற்றி அவர் பத்திரிகையாளருக்கு விளக்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; ''எமது கோரிக்கை தொடர்பாக ஒன்றரை வருடமாக நாம் பேசுகிறோம் பேச்சுவார்த்தையின் பயனாக எதுவுமே நடக்கவில்லை. எனவே தொழிற்சங்க நடவடிக்கை தான் ஒரே வழி. அரசு அறிவித்துள்ள 15 சதவீத சம்பள உயர்வு எல்லோருக்கும் பொதுவானது. எமது பிரச்சினைக்கு தீர்வு அதுவல்ல. 25சதவீத அலவன்ஸ் தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது அது சம்பள உயர்வல்ல. அது நாம் செய்த மேலதிக பணிக்கான கொடுப்பனவே. அதுவும் 1992, 1993, 1994 ஆம் ஆண்டுகளுக்கு மட்டுமே உரியது. அதனை நாம் கேட்கவில்லை. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரே சிபார்சு செய்தார். நாம் நியாயமான சம்பள உயர்வையே கேட்கிறோம். 25 சதவீத அலவன்ஸ் இல்லாமல் நாம் பணிபுரிய தயார். ஆனால் 60 சதவீத சம்பள உயர்வு தேவை.

''பல்கலைக்கழகங்களை நாம் மூட மாட்டோம். அதற்கான அதிகாரம் எங்களிடமில்லை ஆனால் நியமனம் எப்பணிக்காக வழங்கப்பட்டதோ அதனைமட்டுமே செய்வோம். மேலதிக பணிகள் சம்பந்தப்பட்ட பதவிகளை இனி வகிக்கமாட்டோம்.

''பல்கலைக்கழகபீடாதிபதிகள், துறைத் தலைவர்கள் வார்டன்கள் ஆகியோர் பதவிகளை துறந்துவிரிவுரைகளுக்கு மட்டுமே செல்வர்.

மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் எமதுபோராட்டத்திற்கு ஆதரவு உண்டு. வடக்கில் நிலைமை வேறு எனவே வடக்கு பல்கலைக்கழகம்பற்றி எதுவும் கூறமுடியாது'' என்றார்.

## மரண அறிவித்தல்கள்

### நாராயணன் திவ்வியாழினி

(ஆண்டு 3, சென்ஜோன்ஸ் பொஸ்க்கோ மாணவி)

நாராயணன் திவ்வியாழினி காலமானார். இவர் நாராயணன் (வைத்திய அதிகாரி, ஊவாக்கல எஸ்டேட் படுல்சீம)சிவசோதியின் அன்புமகளும், அனுஷா (வேம்படி மகளிர் கல்லூரி 92 - A/L), நீரஜா (ஸ்தானா சீ சீ த. பாடசாலை) அன்புச் சகோதரியும், கார்த்திகேசு (இளைப்பாறிய ஆசிரியர் பண்டிதர் - சேந்தன்), அன்னலட்சுமியின் பேர்த்தியும், சிவானந்தராஜா, கமலராணி (தாதிய உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்திய சாலை). மருமகளும், மகேஸ்வரன், புஸ்ப்பா (பிரான்ஸ்), குணேந்திரன், சிவகௌரி (உள்ளூராட்சித்திணைக்களம்), திருமால் மருகன் சிவகுமாரி (சுவிஸ், ஆகியோரின் பெறாமகளும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03-01-93நாளை [ஞாயிற்றுக்கிழமை] காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

167/11, கோவில் வீதி, நல்லூர். (3907)

தகவல் சிவானந்தராஜா

### தேவசகாயம் அருளானந்தம்

தேவசகாயம் அருளானந்தம் அவர்கள் 01-01-1993 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி மக்டலின் ஜெயராணி (ராணி), இம்மனுவெல் (விக்டர்) (F. P. L. புகையிரதத் திணைக்களம - நீர்கொழும்பு), ஆனந்தராசா சுவிஸ்), திருமதி றொசபெல் (செல்லா) ஆகியோரின் அன்புத்தந்தையும், றொகேசன் பிரான்சிஸ் (மாஸ்டர் மாமா). சாந்தி, ஜெனோவா, மரியதாஸ் (உதவித் தபாலதிபர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாம...

## ''தமிழோசை'' ஒளிநாடா நேற்று வெளியிடப்பட்டது

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், நேற்று மாலை தமிழோசை வீடியோத் திரைப்படம் வெளியிட்டு வைக்கப்பட்டது. முல்லை மாவட்ட விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நிதர்சனம் நிறுவனத்தின் அநுசரணையுடன் தயாரிக்கப்பட்ட தமிழோசை வீடியோத்திரைப்படம் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது

முல்லை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழன்பனின் வெளியீட்டுரையைத் தொடர்ந்து நிதர்சனம் பொறுப்பாளர் இ பரதனிடம் வீடியோப்படத்தின் முதற் பிரதியை கையளித்தன் மூலம் உத்தியோகபூர்வமாகவும், சம்பிரதாய பூர்வமாகவும் இந்த வெளியீடு இடம்பெற்றது.

யாழ். மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வனும், மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி செல்வி ஜெனாவும் மங்களவிளக்கேற்றிவைக்க ஆரம்பமான இந்த வைபவத்தில் விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினரும், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளருமான வெ. இளங்குமரன் திரைப்படத் தயாரிப்பில் பங்கேற்ற அனைத்துக் கலைஞர்களுக்கும் விருது விழங்கிக் கௌரவித்தார்.

விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினரான தேவர், நிதர்சனம் பொறுப்பாளர் பரதன் ஆகியோரின் சிறப்புரைகளைத் தொடர்ந்து கலாநிதி சிவலிங்கராசா, கலாநிதி சோ. கிருஷ்ணராசா ஆசிரியர்கள் செம்பியன்செல்வன், அருணாசலம் ஆகியோரின் மதிப்பீட்டு உரைகளும் இடம்பெற்றது. அரங்கத்தில் தமிழோசையின் வீடியோப்படப்பிரதி திரையிட்டுக் காண்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு நாளை

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | இடம் | நேரம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் காரைநகர் வேலணை நல்லூர் கோப்பாய் | கோப்பாய் மகாவித்தியாலயம் (கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு முன்பாக) இருபாலை வீதி, கோப்பாய் | காலை 8.30 - 10.00 |
| உடுவில் சண்டிலிப்பாய் சங்கானை தெல்லிப்பழை காரைநகர் | மெமோறியல் கல்லூரி மானிப்பாய் | காலை 10.30 - 12.00 |
| சாவகச்சேரி பச்சிலைப்பள்ளி | சாவகச்சேரி இந்துக் கல்லூரி சங்கத்தானை | மாலை 2.00 - 3.00 |
| கரவெட்டி பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு | நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | மாலை 4.00 - 5.00 |

## தமிழருக்கு குறையிருப்பின் தீர்த்து வைக்க வேண்டும்

### - அஸ்கிரிய பீட மகாநாயக்கர்

(கொழும்பு)
''வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு விரைவாக தீர்வு காணவேண்டும். சிறுபான்மை மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கவேண்டும். இதன் மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்'' இவ்வாறு அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கரான சங்கைக்குரிய பலிப்பான சிறி சத்திய நாயக்க தேரர் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவைக் கேட்டுள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா நேற்று அஸ்கிரியபீடத்தில் மகாநாயக்கரைச் சந்தித்த போது இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில் ''உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் உதவி வழங்குவதன் காரணமாகவே இந்தப் பிரச்சினை கூடுதல் சிக்கல் அடைந்துள்ளது. இது உள்நாட்டுப் பிரச்சினை அல்ல. வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும். தமிழ் மக்களுக்கு ஏதாவது குறைபாடு இருக்குமானால் அவற்றை நீதியான முறையில் தீர்த்து வைக்கவேண்டும்''

''சிறுபான்மை இனங்களுக்கு நியாயமான சகலஉரிமைகளும் வழங்கப்படவேண்டும். அபிவிருத்திக்காகச் செலவிடக்கூடிய பெருந்தொகையான பணம் வடக்கு - கிழக்கு யுத்தத்திற்குச் செலவாகிறது சிங்கள மக்களை எந்த விதத்திலும் பாதிக்காதவாறு தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் அவசியம்'' என்றார்.

## வடகிழக்கு புனர்வாழ்வுக்கு உலகநாடுகள் நிதி உதவி

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக பல நாடுகள் முன்வந்துள்ளன. அவுஸ்திரேலிய, கனடா, பிரான்ஸ், பிரிட்டன், சுவீடன், சுவிற்சலாந்து, அமெரிக்கா, வத்திக்கான், இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாடுகள் 3.8 மில்லியன்டாலர்களை இதற்கென அளித்துள்ளது. இவ்வாறு புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி. சில்வா வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசும்போது கூறினார்.

... வழங்க இணக்கம் தெரிவித்திருக்கின்றது. இதனிடையே இந்தியாவிலிருந்துவரும் தமிழ் அகதிகளை படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களிலும் அவர்கள் சொந்த விருப்பத்தின் பேரில் குடியேற அனுமதிப்பது என்று அரசாங்கம்தீர்மானித்திருப்பதுகுறிப்பிடத்தக்கது.

### கல்வி

பொ. சிவகுருநாதன் வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதே வேளை, வேலணைக்...

## போலி விசாவுடன் சென்ற 206 பேர் சிங்கப்பூரில் கைது

(கொழும்பு)
போலி விசாக்களுடன் மேற்கு நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள முயன்ற சுமார் 206 இலங்கையர்களை சிங்கப்... கடவுச் சீட்டு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் பல்வேறு முகவர்கள் மூலம் சிங்கப்பூருக்கு போய்ச் சேர்ந்ததாகவும் முக...

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
அரியாலை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய அமரர் குமாரகுலசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## ஹெலி நோட்டம்

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று நேற்று மாலை 5.45 மணியளவில் யாழ். குடாநாட்டின் கரையோரப்பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

## கொடுப்பனவு இல்லை

யாழ் மாவட்ட விலை மதிப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த சகைதர ஊழியர்களுக்கும் கடந்த மூன்று மாதமாக எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லையென ஊழியர்கள் ஆழ்ந்த கவலையும், மனவேதனையும் அடைந்துள்ளனர்.

கொழும்பு தலைமைச் செயலகத்துடன் பல தடவைகள் இத் திணைக்கள ஊழியர்கள் தங்கள் மூன்று மாதங்களுக்குரிய சம்பளத்தைப் பெற தொடர்பு கொண்டும் இன்று வரை சம்பளம் கிடைக்காததையிட்டு ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (24)

லட சுமியின் பேர்த்தியும், சிவானந்தராஜா, கமலராணி (தாதிய உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்திய சாலை). மருமகளும், மகேஸ்வரன், புஸ்பா (பிரான்ஸ்), குணேந்திரன், சிவகௌரி (உள்ளூராட்சி திணைக்களம்), திருமால் மருகன் சிவகுமாரி (சுவிஸ், ஆகியோரின் பெறாமகளும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03-01-93நாளை [ஞாயிற்றுக்கிழமை] காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

167/11, கோவில் வீதி, நல்லூர். (3907) — தகவல் சிவானந்தராஜா

## தேவசகாயம் அருளானந்தம்

தேவசகாயம் அருளானந்தம் அவர்கள் 01-01-1993 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி மக்டலின் ஜெயராணி (ராணி), இம்மனுவெல் (விக்டர்) (F. P. L. புகையிரதத் திணைக்களம் - நீர்கொழும்பு), ஆனந்தராசா சுவிஸ்), திருமதி றொசபெல் (செல்லா) ஆகியோரின் அன்புத்தந்தையும், றொகேசன் பிரான்சிஸ் (மாஸ்டர் மாமா), சாந்தி, ஜெனோவா, மரியதாஸ் (உதவித் தபாலதிபர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற றோசம்மா, மரியமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். இவர் புனிதசம் பந்தரிசியார் கல்லூரி லைனல், (சதீஸ்) சயந்தன்; திருக்குடும்பக் கன்னியர் மடம் மொயிரா, கவிதா, சயந்தினி, நிஷாந்தி; புனித பரியோவான் கல்லூரி, கிருஷான், அருள்கோபிநாத் மற்றும் அஜந்தன் ரஸ்ராஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும் திரு. றொகேசன் யோசவ (முன்னாள் அதிபர்), திருமதி எலிசபெத் (முத்தம்மா) ஆகியோரின் சம்பந்தியுமாவார். இவரது பூதவுடல் 63, மருதடி வீதி இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக இன்று (02-01-93) சனிக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்:

63, மருதடி வீதி, யாழ்ப்பாணம். — றொகேசன் பிரான்சிஸ், (வில்வண்ணன்)

[3908]

## திரு. முத்தையா ஐயாத்துரை

(முன்னாள் லீலா ஜுவல்லறி உரிமையாளர்)

சங்கானையை பிறப்பிடமாகக் கொண்டவரும் சங்கானை முன்னாள் லீலா ஜுவல்லறி உரிமையாளருமான திரு. முத்தையா ஐயாத்துரை அவர்கள் (30 - 12 - 92) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற முத்தையா நாகமுத்து தம்பதிகளின் மகனும, சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் திருமதி சுலோசனாதேவி சிவானந்தா, திரு. சிறீதரன் (உதவி முகாமையாளர், கனேடியன் பாங்க், கனடா) திருமதி புஸ்பகலா தருமதாஸ் (கனடா), திருமதி புஸ்பராணி தயசீலன், செல்வி வதனி 4 ஆம் வருடம் வர்த்தகப் பிரிவு யாழ் பல்கலைக்கழகம்), செல்வி வசந்தாதேவி (2 ஆம் வருடம் வர்த்தகப்பிரிவு. யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. க. சிவானந்தா (படவரைஞர், நீர்பாசன திணைக்களம், வவுனியா) திரு ப. தருமதாஸ் (RAJEL INDUSTRIES CANADA), திரு ச. தயசீலன் (பாபு ஜுவல்லறி கலைமகள் வீதி, நல்லூர்), ஆகியோரின் அன்பு மாமனாரும் சோபன், மிதுர்சன், சஜீதரன், சொரூபன், சில்வியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இவரது ஈமக்கிரியைகள் 30 - 12 - 92 பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தல் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

பிளாக் வீதி, சங்கானை. (3909) — தகவல்: மனைவி

வோம். மேலதிக பணிகள் சம்பந்தப்பட்ட பதவிகளை இனி வகிக்கமாட்டோம்.

''பல்கலைக்கழகபீடாதிபதிகள், துறைத்தலைவர்கள் வார்டன்கள் ஆகியோர் பதவிகளை துறந்துவிரிவுரைகளுக்கு மட்டுமே செல்வர்.

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் எமதுபோராட்டத்திற்கு ஆதரவு உண்டு. வடக்கில் நிலைமை வேறு எனவே வடக்கு பல்கலைக்கழகம்பற்றி எதுவும் கூறமுடியாது'' என்றார்.

யாக நடவடிக்கை எடுக்க வேண்டும்'' இவ்வாறு அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கரான சங்கைக்குரிய பலிப்பான சிறி சத்திய நாயக்க தேரர் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவைக் கேட்டுள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதிபிரேமதாசா நேற்று அஸ்கிரியபீடத்தில் மகாநாயக்கரைச் சந்தித்தபோது இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில் ''உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் உதவி வழங்குவ

றை நீதியான முறையில் தீர்த்து வைக்கவேண்டும்''

''சிறுபான்மை இனங்களுக்கு

ங்கி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் அவசியம்'' என்றார்.

யாழ். குடாநாட்டின் கரையோரப்பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

# போலி விசாவுடன் சென்ற 206 பேர் சிங்கப்பூரில் கைது

(கொழும்பு)

போலி விசாக்களுடன் மேற்கு நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள முயன்ற சுமார் 206 இலங்கையர்களை சிங்கப்பூர் பொலிசார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் அநேகர் தமிழர்கள்.

இவர்களிடம் மேற்கு நாடுகளுக்குச் செல்வதற்கான போலி விசாக்கள் காணப்பட்டதாகவும் இவர்களில் 60 பேரிடம் சிங்கப்பூர் போலிக் கடவுச் சீட்டு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் பல்வேறு முகவர்கள் மூலம் சிங்கப்பூருக்கு போய்ச் சேர்ந்ததாகவும் முகவர்கள் தலைமறைவாகி விட்டதாகவும் ஆனால் ராஜன் (வயது 34) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கைதாகியோர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது சட்டவிரோத குடிவரவு குற்றத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக சிங்கப்பூர் பொலிசார் தெரிவித்தனர்.

## சாளரம் வெளிவந்துள்ளது

சாளரம் இளையோர் திங்கள் இதழ் ஜனவரி-1993 வெளிவந்துள்ளது. இவ் இதழில் ஒளிரும்பாதை, இடிக்கப்பட்ட பாபர் மசூதியும் இந்தியா எதிர்கொளும் சிக்கல்களும், யாழ்ப்பாணத்தில் திரைப்படக் கழகம் இலக்கியச் சொல்லின்பம், இசையமைப்பாளர் கண்ணனுடன் ஒரு சந்திப்பு, சிறுகதைகள், கவிதைகள் மற்றும் பல அம்சங்களைத்தாங்கி வெளிவந்துள்ளது.

## வீரவணக்க கூட்டம்

நவம்பர், டிசம்பர் மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தீவக மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தீவக பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. செல்வம் தலைமையில் இரவு 8 மணிக்கு ஆரம்பமான இக்கூட்டத்திற்கு தீவக தளபதி திரு. வில்லவன், யாழ் மாவட்டமாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு சிவா ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சேரலாதன், தீவககோட்ட மாவீரர் செயற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த திரு. ப. கனகலிங்கம் ஆகியோரின் உரையைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# வடகிழக்கு புனர்வாழ்வுக்கு உலகநாடுகள் நிதி உதவி

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக பல நாடுகள் முன்வந்துள்ளன. அவுஸ்திரேலிய, கனடா, பிரான்ஸ், பிரிட்டன், சுவீடன், சுவிற்சலாந்து, அமெரிக்கா, வத்திக்கான், இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாடுகள் 3. 8 மில்லியன்டாலர்களை இதற்கென அளித்துள்ளது. இவ்வாறு புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி. சில்வா வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசும்போது கூறினார்.

இதேவேளை ஜப்பான் ஐந்து லட்சம் டாலர்களை வழங்க இணக்கம் தெரிவித்திருக்கின்றது. இதனிடையே இந்தியாவிலிருந்துவரும் தமிழ் அகதிகளை படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களிலும் அவர்கள் சொந்த விருப்பத்தின் பேரில் குடியேற அனுமதிப்பது என்று அரசாங்கம்தீர்மானித்திருப்பதுகுறிப்பிடத்தக்கது.

### குண்டு

மேற்படி பகுதியில் உள்ள தமது வீட்டைப் பார்ப்பதற்காகச் சென்றார். அங்கு தமது வீட்டில் கூரைப்பகுதியில் இருந்த பொருள் ஒன்றை எடுக்க முயற்சித்த சமயம் வெடி குண்டு ஒன்று வெடித்தது. இதனால் இவர் பலத்த காயமடைந்துள்ளார்,

### கல்வி

பொ. சிவகுருநாதன் வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதே வேளை, வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய சி. புலேந்திரன் யாழ். கல்வித் திணைக்களத்தில் இயங்கும் திட்டமிடல் பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாக மாற்றப் பட்டுள்ளார். சி. புலேந்திரன் திட்டமிடற் கடமைகளுக்கு மேலதிகமாக முகாமைத்துவ நிலையக் கடமைகளையும் பொறுப்பேற்கும்படி பணிக்கப் பட்டுள்ளார்.

மேற்படி இடமாற்றங்கள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதியை எதிர்பார்த்து 1993 — 01 — 01 செயற்படும் படியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பொ. சிவகுருநாதன் வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவியை நேற்றுப் பொறுப்பேற்றார்.

## கொடுப்பனவு இல்லை

யாழ் மாவட்ட விலை மதிப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த சகலதர ஊழியர்களுக்கும் கடந்த மூன்று மாதமாக எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லையென ஊழியர்கள் ஆழ்ந்த கவலையும், மனவேதனையும் அடைந்துள்ளனர்.

கொழும்பு தலைமைச் செயலகத்துடன் பல தடவைகள் இத் திணைக்கள ஊழியர்கள் தங்கள் மூன்று மாதங்களுக்குரிய சம்பளத்தைப் பெற தொடர்பு கொண்டும் இன்றுவரை சம்பளம் கிடைக்காததையிட்டு ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (24)

### புலிகள்

மானது. பேச்சுவார்த்தைகள் மூலம் பெறப்படும் தீர்வொன்றே நிலையானது'' என்றார்.

### யுத்த

கொள்வனவு விமானப்படையின் விருப்பமின்றியே இடம்பெற்றதாக பல்வேறு தரப்பினரும் கருத்து கூறியிருந்தமை தெரிந்ததே.

### தனியார்

மருந்தைக் குழந்தைகளுக்குப் பாவிக்க வேண்டாம் என்றும், அது குழந்தைகளின் சருமத்தில் எரிவை உண்டுபண்ணும் என்றும் சிகிச்சை செய்யும் மருத்துவர் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

## இறுதி ஆட்டம்

இடம்:- திருக்குமரன் விளையாட்டுமைதானப்

காலம்:- 02-01-1993 - சனி பி ப. 3 மு

(1) யங்றோயல் (கே. கே. எஸ்)

எதிர்

அண்ணா (பலாலி)

(2) ஞானகலா (மயிலங்காடு) எதிர் றோயல் (ஊரெழு)

(பிரவேசம்:- பெரியோர் 5/- சிறுவர் 3/-)

திருக்குமரன் ச. ச. நிலையம் நிர்வாகம்

(3906)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

01.01.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7446

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள் 41-9696.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-9396, 26-0736, 26-5491, 26-5206, 27-3946, 40-3073, 22-4862, 24-0528, 28-3528, 24-7078, 22-9005, 40-7207, 41-5605, 41-9211.

## மரண அறிவித்தல்

### வெள்ளைத்தேவன்

### கனகசபை ஜெயதாசன்

[கட்சன்]

வீரப்பிறப்பு: 22-08-73 வீரச்சாவு: 01-01-93

கனகசபை ஜெயதாசன் அவர்கள் 01-01-93 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவர் கட்சன் கனகசபை, சிவகாமசவுந்தரி தம்பதிகளின் அன்பு மகனும், மங்களஜெயா, ஜெயகுமரன், ஜெயசுதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலவதனியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று (02-01-93) பிற்பகல 2 மணிவரை அன்னாரின் இல்லத்திலும், 2-30 மணியிலிருந்து சங்கானைசிவப்பிரகாசம் மகாவித்தியாலயத்திலும் வைக்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

சந்தையருகாமை, சங்கானை. (3910) — குடும்பத்தினர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.